# கம்புறுபிடிய பிரதேச சபை
# மாத்தறை மாவட்டம்

-----------------------------

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

2017 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 மார்ச் 19 ஆந் திகதி கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், அந் நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக கணக்காய்வாளர் தலைமையதிபதியின் அறிக்கை 2018 ஆகஸ்ட் 31 ஆந் திகதி சபையின் தலைவருக்கு அனுப்பப்பட்டது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இவ்வறிக்கையின் 1.3 பந்தியில் விவரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்ந்து, கம்புறுபிடிய பிரதேச சபையின் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டு குறைபாடுகள்

பின்வரும் கணக்கீட்டுக் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) முன்னைய ஆண்டின் ரூபா 331,730 தொகையான பிரதியீட்டு சம்பளம் மற்றும் படிகள் ஆண்டிற்கான செலவுகள் எனக் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

(ஆ) முன்னைய ஆண்டின் 06 நிர்மாண வேலைகளுக்காக கடன் கொடுத்தோர் ஏற்பாடுகள் செய்திருந்த போதிலும் மீண்டும் அதே நிர்மாண வேலைகளுக்காக ரூபா 960,357 இற்கான கடன் கொடுத்தோர் ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தது.

(இ) வாகனப் பராமரிப்பு செலவு மற்றும் கடன் கொடுத்தோர் ரூபா 159,395 தொகை மிகையாக காட்டப்பட்டிருந்தது.

(ஈ) அலுவலகத்தின் பொதுக் கழிவறை நிர்மாணிக்கும் நிர்மாண வேலைக்காக செலுத்த வேண்டிய செலவு ரூபா 333,018 தொகையினால் பெற வேண்டிய தொகை ரூபா 633,018 தொகை மிகையாக காட்டப்பட்டிருந்தது.

(உ) முன்னைய ஆண்டிற்கான 04 நிர்மாண வேலைகள் தொடர்பாக ரூபா 574,641 இற்கான 10 சதவீதம் தடுத்து வைத்த பணத்திற்கான மீளாய்வாண்டின் போது மீண்டும் ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தது.

(ஊ) நிர்மாண வேலை ஒன்றிற்காக மீளாய்வாண்டின் போது கிடைத்திருந்த ரூபா 120,000 இற்கான தொகை, பெற வேண்டிய மூலதன உதவி என கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

**1.3.2 இணக்கஞ் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்**

கூட்டுத்தொகை ரூபா 205,293,928 தொகைக்கான 11 கணக்கு விடயங்கள் தொடர்பான மீதிகள் மற்றும் துணைப் பதிவேடுகள்/ அட்டவணைகளில் காட்டப்பட்டுள்ள மீதிகளிடையே கூட்டுத்தொகை ரூபா 58,306,717 தொகைக்கான சமமின்மைகள் அவதானிக்கப்பட்டது.

**1.3.2 தொங்கல் கணக்கு**

முன்னைய ஆண்டுகள் முதல் நிதிக்கூற்றுக்களில் முன்கொண்டு வந்து காணப்படும் ரூபா 1,168,845 தொகையான தொங்கல் கணக்கின் செலவு மீதியை இனங்கண்டு தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

**1.3.4 பெற வேண்டிய கணக்குகள்**

கிரிந்த-புஹுல்வெல்ல பிரதேச சபையில் இருந்த பெற வேண்டிய ரூபா 406,339 தொகையான கடன் கணக்கு 10 வருட காலமாக அறவீடு செய்யப்படாமல் காணப்பட்டது.

**1.3.5 கணக்காய்விற்குத் தேவையான எழுத்துமூல சான்றுகள் இன்மை**

தேவையான தகவல்கள் சமர்பிக்கப்படாமையால் கூட்டுத்தொகை ரூபா 209,814,684 தொகைக்கான 18 கணக்கு விடயங்களை கணக்காய்வின் போது திருப்திகரமாக மெய்மையாய்தல் மேற்கொள்வதற்கு முடியாதிருந்தது.

**1.3.6 இணக்கமின்மைகள்**

**1.3.6.1 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணக்கமின்மை**

சட்டங்கள், விதிகள் பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணக்கமின்மைச் சந்தர்ப்பங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் தொடர்பு | இணக்கமின்மை |
|---|---|
| (அ) 1988 பிரதேச நிதி மற்றும் நிருவாக விதி | |
| (i) விதி 33 | வீதவரி செலுத்துவதை புறக்கணிக்கும் நபர்கள் தொடர்பாக அட்டவணை மற்றும் ஆதனங்களை தடை செய்யும் ஏழுத்தாணை அட்டவணை தயாரித்திருக்கவில்லை. |
| (ii) விதி 193 | பாதீட்டு மற்றும் குறைநிரப்பு அங்கீகரிக்கப்பட்ட செலவுடன், செலவு விடயங்களில் உள்ளவாறாக செலவுகளை இணக்கஞ் செய்து மிகைகள் மற்றும் பாற்றாக்குறைகள் தொடர்பான காரணங்களை காட்டும் கூற்றொன்று சமர்த்திருக்கவில்லை. |

(ஆ) இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் நிதிப்பிரமாணக் கோவை

| | | |
|---|---|---|
| (i) | நிதிப்பிரமாணம் 104 | மீளாய்வாண்டின் போது சபையின் வாகனம் ஒன்றிற்கு ஏற்பட்டிருந்த விபத்து தொடர்பாக குறிப்பிட்ட பிரமாணங்களின் பிரகாரம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. |
| (ii) | நிதிப்பிரமாணம் 110 | சேதங்கள் தொடர்பான விபரங்களை பதிவு செய்வதற்காக 11 பிரிவுகளைக் கொண்ட பதிவேடு ஒன்று பேணப்பட்டிருக்கவில்லை. |

## 2 நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்பிக்கப்பட்டிருந்த நிதிக்கூற்றுகளின் பிரகாரம் 2017 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டின் போது சபையின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 13,229,118 தொகையாக காணப்பட்டதுடன் அதற்கு நேரொப்ப முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 12,884,716 ஆகக் காணப்பட்டது.

## 2.2 வருமான நிருவாகம்

### 2.2.1 மதிப்பீட்டு வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டு தொடர்பாக சமர்ப்பித்திருந்த மதிப்பீட்டு வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பாக தகவல்கள் கீழே காணப்படுகின்றன.

| வருமான மூலம் | 2017 | | | | 2016 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | மதிப்பீட்டு வருமானம் | சிட்டையிடப் பட்ட வருமானம் | சேகரிக்கப் பட்ட வருமானம் | திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மொத்த நிலுவை | மதிப்பீட்டு வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப் பட்ட வருமானம் | திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மொத்த நிலுவை |
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| வீதவரியும் வரியும் | 1,500,753 | 1,989,885 | 1,818,934 | 1,319,640 | 336,464 | 1,491,248 | 1,458,432 | 1,148,689 |
| வாடகை | 6,804,527 | 6,768,502 | 6,159,783 | 1,653,701 | 5,211,924 | 5,811,423 | 5,882,573 | 1,044,982 |
| அனுமதிப்பத் திர கட்டணம் | 857,000 | 1,413,330 | 1,406,630 | 85,795 | 1,352,000 | 972,206 | 972,206 | 79,095 |
| ஏனைய வரு மானங்கள் | 20,298,692 | 22,645,674 | 14,114,191 | 55,018,666 | 16,949,852 | 20,808,310 | 14,760,010 | 46,487,183 |
| மொத்தம் | 29,460,972 | 32,817,391 | 23,499,538 | 58,077,802 | 23,850,240 | 29,083,187 | 23,073,221 | 48,759,949 |

### 2.2.2 வருமானம் சேகரித்தல் செயலாற்றுகை

மீளாய்வாண்டின் போது மதிப்பீடு செய்யப்பட்ட மொத்த வருமானம் ரூபா 29,460,972 தொகையாகக் காணப்பட்டதுடன், சிட்டை இடப்பட்ட வருமானம் ரூபா 32,817,391 ஆக காணப்பட்டது. ரூபா 48,759,949 தொகையாகக் காணப்பட்ட ஆரம்ப நிலுவையுடன் அறவிடப்பட வேண்டிய மொத்தத் தொகை ரூபா 81,577,340 தொகை எனினும், ஆண்டின் போது சேகரிக்கப்பட்ட மொத்த வருமானம் ரூபா 23,499,538 தொகையாக இருந்தமையால் வருட இறுதியில் உள்ளவாறு மொத்த நிலுவை ரூபா 58,077,802 ஆக காணப்பட்டது.

### 2.2.3 வீதவரியும் வரியும்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

#### (அ) வீதவரி

ஆரம்ப நிலுவை மீதி ரூபா 832,808 தொகையாக காணப்பட்டதுடன், ரூபா 1,317,816 தொகையின் ஆண்டிற்கான சிட்டையிடல் உடன் ரூபா 2,150,624 தொகை அறவிடப்படவேண்டியிருந்தது. மொத்த அறவீடுகள் ரூபா 1,151,027 தொகையாக காணப்பட்டதால் வருட இறுதியில் உள்ளவாறு ரூபா 999,597 இற்கான நிலுவை மீதி ஒன்று காணப்பட்டது.

#### (ஆ) ஏக்கர் வரி

ஆரம்ப நிலுவை ரூபா 315,881 தொகையாக காணப்பட்டதுடன், ரூபா 24,436 தொகை ஆண்டிற்கான சிட்டையிடலுடன் ரூபா 340,317 தொகை அறவிடப்பட வேண்டிக் காணப்பட்டது. ஆண்டின் போது மொத்த அறவீடுகள் ரூபா 20,275 தொகையாக காணப்படாமையால் வருட இறுதியில் உள்ளவாறு ரூபா 320,042 தொகை நிலுவையில் காணப்பட்டது.

### 2.2.4 வாடகை

ஆரம்ப நிலுவை ரூபா 1,044,982 தொகையாக காணப்பட்டதுடன், ரூபா 6,768,502 தொகையான ஆண்டிற்கான சிட்டையிடலுடன் ரூபா 7,813,484 தொகை அறவிடப்பட வேண்டியிருந்தது. ஆண்டின் போது மொத்த அறவீடுகள் ரூபா 6,159,783 ஆகக் காணப்படாமையினால், வருட இறுதியில் உள்ளவாறு நிலுவை மீதி ரூபா 1,653,701 தொகை ஆகக் காணப்பட்டது.

### 2.2.5 அனுமதிப்பத்திரக் கட்டணம்

ஆரம்ப நிலுவை ரூபா 79,095 ஆக இருந்ததுடன், ஆண்டிற்கான சிட்டையிடல் ரூபா 1,413,330 தொகை உட்பட ரூபா 1,492,425 தொகை அறவிடப்பட வேண்டிக் காணப்பட்டது. வருட இறுதியில் உள்ளவாறு நிலுவை மீதி ரூபா 85,795 தொகை காணப்பட்டது.

### 2.2.6 நீர்க் கட்டணம்

ஆரம்ப நிலுவை மீதி ரூபா 1,903,889 தொகையாக காணப்பட்டதுடன், ரூபா 3,766,936 தொகையின் ஆண்டிற்கான சிட்டையிடல் உடன் ரூபா 5,670,825 தொகை அகற்றப்படவேண்டியிருந்தது. ஆண்டின் போது மொத்த அறவீடுகள் ரூபா 4,505,554 தொகையாக காணப்பட்டதுடன் வருட இறுதியில் உள்ளவாறு ரூபா 1,165,271 தொகை நிலுவை மீதி ஒன்று காணப்பட்டது.

### 2.2.7 நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்

மாகாண சபையின் பிரதான செயலாளரிடம் மற்றும் ஏனைய அதிகாரிகளிடம் 2017 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு கிடைக்க வேண்டியிருந்த முத்திரைக் கட்டணம் ரூபா 24,931,913 தொகை மற்றும் நீதிமன்றத் தண்டப் பணம் ரூபா 1,165,185 தொகையாகும்.

## 3 செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றுகை

பிரதேச சபை சட்டத்தின் 3 ஆம் பிரிவின் கீழ் மக்களின் சுகாதாரம், பொது பயன்பாட்டு சேவை மற்றும் பொது பாதைகள் தொடர்பாக கருமங்களை முறைப்படுத்துதல் மற்றும் கட்டுப்படுத்துதல் பொதுமக்களின் சுகபோக வாழ்க்கை, வசதி மற்றும் நலன்புரி ஆகிய சபையினால் நிறைவேற்றப்பட வேண்டியிருந்த செய்பணிகள் நிறைவேற்றுவது தொடர்பாக கண்டுபிடிக்கப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

#### (அ) எதிர்பார்க்கப்பட்ட வெளியீட்டு மட்டத்தை(output) பெற்றுக்கொள்ளப்படாமை

பல்வேறு 6 செய்பணிகள் நிறைவேற்றுவதற்காக பின்வருமாறு ரூபா 3,430,000 இற்கான தொகைக்கு மதிப்பீடு செய்திருந்த நிகழ்ச்சித் திட்டங்களில் ரூபா 441,089 இற்கான தொகை செலவிடப்பட்டிருந்த போதிலும் எதிர்பாராத பூர்த்தி செய்யப்பட வேண்டிய மட்டத்தினை (output) கைப்பற்றியிருக்காத சந்தர்ப்பங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| செய்பணி | மதிப்பீட்டுத் தொகை | நிறைவேற்றிய அளவின் பெறுமதி | அவதானிப்பு |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | |
| பொதுவான நிருவாகம் | 1,000,000 | - | செயற்படுத்தியிருக்கவில்லை |
| சுகாதார சேவை | 230,000 | - | செயற்படுத்தியிருக்கவில்லை |
| நீர் சேவை | 1,000,000 | 319,166 | எதிர்பார்த்த மட்டத்தினை பூர்த்தி செய்திருக்கவில்லை |
| துணை சேவை | 500,000 | - | செயற்படுத்தியிருக்கவில்லை |
| நலனோம்புச் சேவை | 700,000 | 121,923 | எதிர்பார்த்த மட்டத்தினை பூர்த்தி செய்திருக்கவில்லை |
| | 3,430,000 | 441,089 | |

#### (ஆ) திண்மக் கழிவுப்பொருள் முகாமைத்துவம்

நாளாந்தம் சுமார் 03 தொன்கள் குப்பை வகைப்படுத்தப்படாமல் சேகரிக்கப்படுவதுடன், மீளாய்வாண்டின் போது குப்பைகள் சேகரிப்பதற்கான சபையினால் ரூபா 7,372,866 இற்கான செலவு மேற்கொள்ளப்பட்டிருந்தது. தொழிற்சாலைகள், வீடுகள், மீன் விற்பனவு நிலையங்களில் இருந்து குப்பைகள் சேகரிப்பது தொடர்பாக கட்டணம் ஏதும்

அறவீடு செய்திருக்கவில்லை. சேகரிக்கப்படும் குப்பைகளில் உக்கக்கூடிய குப்பை மற்றும் திண்ம கழிவுப் பொருள் நகருக்கு மத்தியில் ஓர் இடத்தில் குவிக்கப்படுவதனால் சுற்றாடலின் தூய தன்மைக்கு பாதிப்பு ஏற்பட்டுள்ளது.

**(இ) சுற்றாடல் சிக்கல்கள்**

சுற்றாடல் சட்டத்தின் பிரகாரம் 2008 ஜனவரி 25 திகதி வெளியிடப்பட்ட 1533/16 மற்றும் வர்த்தமானி அறிவித்தலின் மூலம் அறிவித்துள்ளவாறு அதிகாரப் பிரதேசத்தில் சுற்றாடல் அனுமதிப்பத்திரங்கள் பெற்றுக்கொள்ள வேண்டிய 298 கைத்தொழில்களில் 262 வியாபார நிலையங்களில் சுற்றாடல் அனுமதிப்பத்திரம் பெற்றிருக்காததுடன் அதன் காரணமாக சபை ரூபா 1,152,800 இற்கான வருமானம் ஒன்றினை இழந்துள்ளது. அந்த தொழிற்சாலைகளால் சுற்றாடலுக்கு ஏற்படுகின்ற சேதங்களை பரிசோதனை செய்திருக்கவில்லை.

**(ஈ) நிலைபேறான அபிவிருத்தி இலக்கு**

நிலைபேறான அபிவிருத்திக்கான 2030 நிகழ்ச்சி நிரழில், நிலைபேறான அபிவிருத்தி குறிக்கோள்கள் மற்றும் இலக்குகளுக்காக உலகளாவிய சுட்டிகளின் மூலம் சபையின் அதிகாரப் பிரதேசத்திலுள்ள பொது மக்களின் வாழ்க்கை தரம் மற்றும் சுகாதாரத்தை மேம்படுத்துவதற்கான நீண்ட காலத்திட்டங்கள் சபையினால் தயாரித்திருக்கவில்லை.

**3.2 மனிதவள முகாமைத்துவம்**

**(அ) ஊழியர் வெற்றிடங்களும் மிகைகளும்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) இரண்டாம் தர மற்றும் ஆரம்ப தர பதவிகளில் 04 வெற்றிடங்கள் மற்றும் மொத்தம் 36 மிகைகள் காணப்பட்டன.

(ii) ஆரம்ப தர பதவிகளுக்காக சேர்க்கப்பட்டிருந்த ஊழியர்கள் 11 பேர் அலுவலக அலுவல்களுக்காக ஈடுபடுத்தப்பட்டிருந்ததுடன், அவர்களுக்கு சம்பளமாக ரூபா 4,245,992 இற்கான தொகை சபை நிதியத்திலிருந்து செலுத்தப்பட்டிருந்தது.

(iii) ஆரம்ப நிலையில் 16 பதவிகள் மிகையாக இருக்கும் போது அமைய, தற்காலிக மற்றும் ஒப்பந்த நிலையில் 11 பதவிகளுக்காக சேர்க்கப்பட்டு அவர்களின் சம்பளமாக ரூபா 3,729,244 தொகை செலுத்தப்பட்டிருந்தது.

**(ஆ) ஊழியர் கடன்**

15 ஊழியர்களிடம் அறவிடப்பட வேண்டிய கூட்டுத்தொகை ரூபா 174,250 தொகை நிலுவை கடன் மீதியில் ரூபா 62,126 கடன் மீதியொன்று 05 வருட காலம் முதலும், மேலும் ரூபா 17,925 இற்கான மீதியொன்று ஒரு வருட காலம் முதலும் அறவிடப்படாமல் காணப்பட்டது. நிலுவை கடன் மீதிகளில் காணப்பட்ட 2014 ஆண்டில் இறந்த பெண் உத்தியோத்தர் ஒருவரிடம் அறவிடப்பட வேண்டிய ரூபா 94,200 இற்கான கடன் மீதியை பணிக்கொடையில் இருந்து அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

## 3.3 செயற்பாட்டு திறமையின்மை

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) சபையினால் கடந்த ஆண்டுகளின் போது காணிகள் துண்டுகளாக்கப்பட்டு ஏலவிற்பனை செய்வது தொடர்பாக வரைபுகளை அங்கீகரிக்கும் போது தரையின் அளவு ஒரு ஹெக்டயரை விட அதிகரிக்கும் சந்தர்ப்பங்களில் காணியின் அளவில் 10 சதவீதம் சபைக்கு பெற்றுக்கொள்ள வேண்டுமெனினும், 2 ஏக்கர் 01 ரூட் 33.6 பர்சஸ் சபைக்கு பெற்றுக்கொண்டிருக்கவில்லை. அதேபோல் 06 காணிகளில் இருந்து பெறவேண்டிய அளவை விட 03 ஏக்கர் 01 ரூட் 27.75 பர்சஸ் அளவு ஒன்று குறைவாக பெற்றிருந்தது.

(ஆ) மீளாய்வாண்டின் போது மின்சார தொழில்நுட்பவியலாளருக்கு ரூபா 436,907 இற்கான மின்சார உபகரணம் மற்றும் ரூபா 1,354,940 தொகைக்கான 621 பல்வேறு வகையான மின்குமிழ்கள் வழங்கப்பட்டிருந்தது. ஆண்டின் போது பராமரிக்கப்பட்ட வீதி விளக்குளின் எண்ணிக்கை 254 ஆக இருந்தமையினால் மேலே செலவிடப்பட்ட தொகையின் சரியான தன்மை உறுதிப்படுத்தப்படவில்லை.

## 3.4 சொத்துக்கள் முகாமைத்துவம்

### 3.4.1 சொத்துக்கள் ஆவணப்படுத்தப்படாமை

பிரதேச சபை நிதி மற்றும் நிருவாக வீதக் கோவையின் விதி 217 இன் பிரகாரம் 01 ஏக்கர் 30 பர்சஸ் தொடர்பான தகவல்கள் ஆவணப்படுத்தப்படவில்லை.

### 3.4.2 விளைவற்ற / குறைபயன்படு சொத்துக்கள்

மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு 3 வருடங்களை விட மிகையான காலம் முதல் பயன்படுத்தப்படாமல் சிதைவடைந்த நிலையில் காணப்பட்ட 07 வாகனங்கள் 2017 ஆண்டின் பண்ட கணிப்பீட்டின் பிரகாரம் ஏலவிற்பனவு செய்வதற்கு விதந்துரைக்கப்பட்டிருந்த போதிலும் அச் சொத்துக்கள் தொடர்பாக உரிய நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

### 3.4.3 வருடாந்த காணிக் கணிப்பீடு

பிரதேச சபை(நிதி மற்றும் நிருவாக) விதிக் கோவையின் 218 ஆம் விதியின் பிரகாரம் சபைக்கு சொந்தமான காணிகள் மற்றும் கட்டிடங்கள் தொடர்பாக கணிப்பீடு ஒன்று மேற்கொள்ளப்பட வேண்டுமெனினும், மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு ரூபா 45,209,492 தொகை பெறுமதியான காணி மற்றும் கட்டிடங்களுக்காக கணிப்பீடு ஒன்று மேற்கொண்டிருக்கவில்லை.

# 4 கணக்களிப் பொறுப்பும் நல்லாளுகையும்

## 4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

மீளாய்வாண்டிற்கான பாதீட்டு மற்றும் உள்ளவாறான வருமானங்கள் மற்றும் செலவுகளிடையே கீழே விபரிக்கப்பட்டுள்ளவாறு கணிசமான முரண்கள் அவதானிக்கப்பட்டமையால், பாதீடு ஆக்கபூர்வமான நிதி முகாமைத்துவ கட்டுப்பாட்டுக் கருவி ஒன்றாக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை என அவதானிக்கப்பட்டது.

(அ) 03 வருமான விடயங்களின் பிரதிகூலமான முரண்களின் கூட்டுத்தொகை ரூபா 5,625,925 தொகையாக காணப்பட்டதுடன், அப்பெறுமதி 2.14 சதவீதம் முதல் 13.22 சதவீதம் வரையான வீச்சில் காணப்பட்டது.

(ஆ) 07 செலவு விடயங்களில் கூட்டுத்தொகை ரூபா 9,593,783 தொகைக்கான சேமிப்பு காணப்பட்டதுடன், அப்பெறுமதி 6.08 சதவீதம் முதல் 52.3 சதவீதம் வரையான வீச்சில் காணப்பட்டது.

(இ) முறையான அங்கீகாரம் ஏதும் இன்றி ஒரு செலவு விடயத்தில் அங்கீகரிக்கப்பட்ட வரையரையை மிகைத்து ரூபா 418,119 செலவு செய்யப்பட்டுள்ளது.

**4.2 உள்ளக கணக்காய்வு**

இலங்கை குடியரசின் நிதிப்பிரமாணம் 133 மற்றும் 134 இல் காட்டப்பட்டுள்ள ஏற்பாடுகள் மற்றும் தென் மாகாண உள்ளூராட்சி ஆணையாளரின் 2014 பெப்ரவரி 24 திகதிய தபபா/யஹ/01/ந.ச.லே இலக்கம் கொண்ட சுற்றறிக்கையின் பிரகாரம் போதியளவு அகக் கணக்காய்வு ஒன்று மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. நிதிப் பிரமாணம் 134 இன் பிரகாரம் உள்ளகக் கணக்காய்வு நிகழ்ச்சித் திட்டம் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பித்திருக்காததுடன் உள்ளகக் கணக்காய்வு அறிக்கைகளின் பிரதிகள் கணக்காய்விற்கு அனுப்புவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

**4.3 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு**

2009 ஜுன் 09 திகதி DMA/2009(i) இலக்கம் கொண்ட முகாமைத்துவ சுற்றறிக்கையின் ஏற்பாடுகளின் பிரகாரம் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு நிறுவுவதற்கு மீளாய்வாண்டு இறுதி வரை நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

**5 முறைமைகள் மற்றும் கட்டுபாடுகள்**

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட குறைபாடுகள் அவ்வப்போது சபையின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டதுடன், பின்வரும் கட்டுபாட்டுப் பரப்புகள் தொடர்பாக விஷேட கவனம் செலுத்தப்பட வேண்டும்.

(அ) நிலையான சொத்துக்கள்
(ஆ) வருமானம் சேகரித்தல்
(இ) பாதீட்டுக் கட்டுப்பாடு
(ஈ) கணக்கீடு